தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-4] | தி.பி.2017 | மடங்கல் | (12-10-1986) | 65 காசுகள் | [இதழ் எண்: 75] | [பகுதி 23-26

இந்தியாவில் அமைதியின்மைக்கு இந்திய அரசே காரணம்!

கருவிகளால் மக்களை அச்சுறுத்தி, அடக்கி, ஒடுக்கிப் பணிய வைக்கும் உத்திகள் எல்லாம் இனிமேல் செல்லாது!

பேசுவது காந்தியம்! நடப்பது பாசிசம்!

மக்களின் எல்லாத் துறையினரும், மாநிலத்தவரும் கிளர்ந்தெழத் தொடங்கி விட்டனர்!

இந்தியத் தேசியம் எனும் செயற்கை உணர்வைத் தவிர்த்து, உண்மையான இனத் தேசியத்திற்கு மதிப்புக் கொடுங்கள்!

இல்லையேல் நாடு சீரழியும்! அரசு தூக்கும் அதே கருவியை மக்கள் தூக்க நெடுநாள் ஆகாது! எச்சரிக்கை!

மக்களின் உண்மையான எழுச்சிக்குக் காரணத்தை விளங்கிக் கொள்ளாமலும், அக்காரண நீக்கத்திற்குரிய வழியைப் பின் பற்றாமலும், எந்த ஓர் அரசாலும் மக்கள் கிளர்ச்சிகளை அடக்கி விட முடியாது. ''அடங்கியிருப்பவர்களே மக்கள்! அடங்காதவர்கள் வன்முறையாளர்கள்' தீவிரக்காரர்கள், கொடுமைக்காரர்கள்'' என்றெல்லாம் குறைத்துப் பேசி, இழித்துப்பேசிமக்கள் கோரிக்கையாளர்களைஒழித்துவிடலாம்என்று கனவு காண்பது அறியாமை. விடுதலைக்காகப் போராடி மக்களாட்சியை அமைத்தவர்கள், மக்கள் உரிமைகளை மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும்! இப்பொழுதுள்ள ஆட்சியாளர்கள் அவ்வாறு நடந்து கொள்ளாமல் இருப்பதற்கு, உரிமைக்காகப் போராடியவர்கள் வேறாகவும், ஆட்சியில் உள்ளார்கள் வேறாகவும் இருப்பதே காரணம். பெற்றவளுக்கே குழந்தையின் மீது பாசமும் பரிவும் ஏற்படும். பெறாதவளுக்கு அவை எங்கிருந்து வரும்? இராசிவ்காந்தி அரசு அதிகார மமதையால் கிளர்ந்து வரும் தேசிய இன எழுச்சிகளை ஒடுக்கத் தொடங்குவதும் அத்தகையதே!

வெறும் அழகுச் சொற்களாலும் கவர்ச்சி அரசியலாலும் மக்களை அமைதிப்படுத்திவிட முடியாது. இந்திய அரசு இப்போது கடைப்பிடித்து வரும் பாசிசக் கொள்கையால் மக்கள் எழுச்சிகள் மீண்டும் மீண்டும் கிளர்ந்தெழுந்து, நாட்டைச் சீரழிக்குமே அன்றி, அமைதியான ஆட்சியை உருவாக்கி விட முடியாது. இந்தியாவில் அமைதியின்மைக்கு இந்திய அரசின் அரசியல் அதிகார வெறி அடக்கு முறைகளே முழுக்காரணம்!

வெறும் போர்க்கருவிகளால் மக்களை அச்சுறுத்தி, அடக்கி, ஒடுக்கிப் பணிய வைக்கும் உத்திகள் எல்லாம் இனிமேல் செல்லாது என்பதையே ஆங்காங்கே கிளர்ந்து வரும் பஞ்சாப், மிசோரம், குசராத், மேற்குவங்காள, கூர்க்கா போராட்ட எழுச்சிகள் காட்டுகின்றன. இவற்றின் உண்மையான உணர்வுகளை விளங்கிக் கொள்ளாமல், படைபட்டாளம் கையில் உள்ளன என்று சரமாரியாகச் சுட்டுத் தள்ளுவதனால் மக்களை அமைதியடையச் செய்துவிட முடியாது.

இந்தியாவில் இன்றைய நிலையில் எந்த மாநிலத்திலுமே மக்கள் அமைதியாக இல்லை. இந்தியத் தலைநகரான தில்லியிலேயே நாளுக்கொரு குண்டு வெடிப்பும், நகரத்துக்கொரு போராட்டமுமாக நடந்து கொண்டிருக்கின்றன. காரணம் மக்கள் வறுமை மட்டுமில்லை, அதிகாரச் செருக்குகள், ஆட்சி வல்லாண்மைகளே அப்போராட்டங்களை மேலும் மேலும் வலுப்படுத்திக் கொண்டு ஊக்கி வருகின்றன.

நாட்டைப் பொறுத்தவரையில் வெளிநாட்டுப் போர் மூட்டங்களை விட, உள்நாட்டுப் போராட்டங்களே அரசை அமைதியிழக்கச் செய்து வருகின்றன. இவற்றையெல்லாம் ஒரே அதிகார அணுகுமுறையைக் கொண்டு அரசு அடக்கப் பார்க்கிறது. எல்லைகளைப் பாதுகாக்கவும், வெளிநாட்டுத்தாக்கங்களை முறியடிக்கவும் வாங்கிக் குவித்து வைக்கப் பெற்றிருக்கும் போர்க்கருவிகளெல்லாம் மக்களின் உரிமையெழுச்சிகளைக் கட்டுப்படுத்துவதற்கே பயன்படுத்தப் பெறுகின்றன. கிளர்ச்சியுறும் மக்களைக் கட்டுப் படுத்துவதற்கும், அடக்குவதற்கும் வெள்ளைக்காரர்கள் பயன்படுத்திய அதே உத்திகள் கையாளப் பெறுகின்றன. நீடித்து வரும் இந்த நிலை இந்நாட்டின் எதிர்காலத்தை ஒரு கேள்விக் குறியாக மாற்றியிருக்கிறது.

அரசியலில் எங்குப் பார்த்தாலும் ஊழல்கள், கையூட்டுகள், அதிகார கொள்ளையடிப்புகள், சட்டத்தின் தவறான நடைமுறைகள்!

பொருளியல் நோக்கில், நாட்டில் பெரும்பகுதி மக்கள் வறுமையின் கொடுமையான பிடியிலிருந்து விடுபடாத அவல நிலை! செத்தும் சாகாத நிலையில் பல கோடி மக்கள்!

தொழிலியல் சீரழிவுகள், ஊதியக் கிளர்ச்சிகள், மொழியியல் வாழ்வியல் போராட்டங்கள்!

எங்கும் எந்த நிலையிலும் அமைதியாக இருக்க வேண்டிய கல்வித்துறைகளிலேயே போராட்டங்கள் ஊடுருவி விட்டன. மாணவர்கள் அமைதியாகப் படிக்க முடியாத சூழ்நிலைகள் உருவாகி விட்டன. பள்ளிகளையும் கல்லூரிகளையும் விட்டு வெளியேறி, மாணவர்கள் தொழிலாளர்களுடனும், போராட்டக்காரர்களுடனும், அரசியல் காரர்களுடனும் இணைந்து, தங்கள் எதிர்காலங்களைச் சிதைத்துக் கொள்ளுகின்ற முறையில், போர்க்கருவிகளைக் கைகளில் எடுக்கத் தொடங்கி விட்டனர். இந்நிலை நாட்டின் எதிர்காலத்தை எங்கே கொண்டு போய் விடும் என்று கருதிப் பார்க்கவும் இயலாமல் செய்து வருகிறது.

(தொடர்ச்சி 6-ஆம் பக்கம் பார்க்க)

தந்தை பெரியாரின் ஒரே உயிர்க்கொள்கை

தமிழ்நாட்டு விடுதலையே!

(கீழே கொடுக்கப்பெறும் கருத்துகள் தந்தை பெரியார் பல வேறு காலங்களிலும் அவரின் இறுதி நாள்களிலும் கூறிய-எழுதிய கருத்துகளாகும். இவை மயிலாடுதுறையில் கடந்த 17-9-1986 ஆம் நாளன்று தொடங்கப்பெற்ற **தமிழ் இன விடுதலைக் கழகத்** தொடக்கவிழாவில் வெளியிடப்பெற்ற அக் கழகத்தின் கொள்கை விளக்க நூலில் இருந்து எடுக்கப்பெற்றவையாகும். அந்நூல் 5 உருபா விலையில் 'வழக்கறிஞர் **தி. இராமதாசு, 97,** இலாகடம், மயிலாடுதுறை-609001' என்னும் முகவரியில் கிடைக்கும். அந்நூல் வேண்டுவோர் அங்கு எழுதிப் பெற்றுக்கொள்க. கருத்துகள், தூய தமிழில் தரப்பெறுகின்றன.)

1. *தமிழ்நாடு தமிழருக்கே !*
(பெரியார்-விடுதலை 3-12-1957)

தமிழினம் 5,000 ஆண்டுகளுக்கு முன் சிந்து முதல் பஃறுளி ஆறுவரை பரவி வாழ்ந்த ஒரு தனித்த இனம். திராவிட அரப்பா-மொகஞ்சதாரோ சிந்து வெளி நாகரிகத்திற்குச் சொந்தக்காரன் **தமிழன்.**

அவன் இன்று வடவருக்கு, இத்தி வல்லாண்மைக்கு அடிமையாகியுள்ளான்.

தமிழ்மகன் தமிழ்நாட்டின் விடுதலையும், **உரிமையும், செல்வப் பெருக்கும் தொழில் மேம்பாடுந்தான் தன்னுடையதென்றும், இவற்றுக்காக உழைப்பது தான் தனக்காகவும், தமிழ் மக்களுக்காகவும்," தமிழ் நாட்டுக்காகவும் செய்யும் தொண்டு, கடமை என்றும் கருதவேண்டும்.**

தமிழனின் இழிவு நிலைக்குக் காரணம், **இந்து மதத்தைத் தனதுமதம் என்று கருதியதும், இந்தியா முழுமையும் தன் நாடு (தேசம்) என்று கருதியதும், இவ்விரண்டுக்கும் உழைக்கும் தொண்டே மக்கள் தொண்டு, தேசத்தொண்டு என்று கருதி வருவதுமேயாகும்.**

இந்தியத் தேசப்பற்று என்பது தமிழன் பல நாட்டாரின் நலனுக்கு உழைத்துப் பலநாட்டாருக்கு அடிமையாய் இருப்பது என்பதாகும்.

பாழும் தேசியத்தால் நாம் 50 ஆண்டுகளைப் பாழாக்கி விட்டோம்.

உதைக்கும் காலுக்கு முத்தமிட்டுப் பூசை செய்கிறோம்; மலத்தை மனமார முகருகிறோம்; மானமிழந்தோம்; ஐம்பொறிகளின் உணர்ச்சியை இழந்தோம்; மாற்றானுக்கு அடிமையாகி வணங்குகிறோம்.

இனியாவது, *'தமிழ்நாடு தமிழருக்கே'* என்று ஆரவாரம் செய்யுங்கள்.

உங்கள் வீடு தோறும் ***'தமிழ்நாடு தமிழருக்கே'*** என்ற வாசகத்தை எழுதிவையுங்கள்.

நம் வீட்டுக்குள் மாற்றான் புகுந்துகொண்டதோடல்லாமல், அவன் நம் ஆண்டை (எஜமான்) என்றால், நமக்கு இதைவிட மானமற்ற தன்மை, இழிதன்மை வேறு என்ன எனச் சிந்தியுங்கள்.

புறப்படுங்கள்! தமிழ் நாட்டுக்குப் பூட்டப்பட்ட விலங்கை உடைத்துச் சின்னாபின்ன மாக்குங்கள் !

2. *சட்டத்தை நீயே செய்துகொண்டு எங்களை அடக்கி ஆளுகிறாய் !*

அரசியல் சட்டம் என்ற பெயரால் 'மனுதரும சாத்திரம்' போன்ற **'ஒரு பெயரற்ற ஆகாவழிச்'** சட்டத்தைச் செய்து கொண்டு, அதன் பெயரால் நாங்கள் எது செய்தாலும் தவறு என்று அடக்குவது, ஒடுக்குவது என்று தொடங்குகிறாய். **நாடு பிரிவினை கேட்பது தவறு, வடநாட்டான் சுரண்டல் தடுப்பு மறியல் தவறு, வகுப்பு முறை உரிமையைக் கேட்பது தவறு, இப்படியாக எங்கள் எல்லா முயற்சிகளையும் சட்டப்படி தவறு என்கிறாய்.**

உன் வல்லாண்மைக்கான முறையில் எங்களை நிலையான அடிமைப்படுத்திச் சுரண்டிக் கொண்டிருக்கும் தன்மையில் ***'அரசியல் சட்டம்'*** எங்களைக் கலக்காமல் செய்துகொண்டு, அதை வலுக் கட்டாயமாக எங்கள் தலையில் புகுத்துவது என்றால் நாங்கள் எப்படி ஒப்புக்கொள்ள முடியும் ?

—***பெரியார் சிந்தனை***-(பாகம் 2, பக்கம் 814)

3. *குடியரசா இது? பார்ப்பான் அரசே!*

இன்றைய இந்திய ஆட்சிக்குக் குடியரசாட்சி என்று பெயர் சொல்லப்பட்டாலும், விலைமகளுக்குத் **'தேவதாசி'** என்று பெயர் வைக்கப்பட்டிருப்பது போல், என்றும் அனைத்ததிகாரியாக ஒரு பார்ப்பானே இருந்து வரும்படியான ஆட்சித் தன்மைக்குக் குடியரசு என்று பெயர் கொடுக்கப் பட்டிருக்கிறது.

விளக்கிச் சொல்லவேண்டுமானால், இன்றைய குடியரசாட்சியில், வடநாட்டான் ஒருவன்தான்-பார்ப்பான்தான் தலைமையமைச்சர் (பிரதமர்) ஆக, ஆட்சியாளராக, வடநாட்டு இந்திக்காரன்-அல்லது-பார்ப்பான் ஒருவன்தான் குடியரசுத் தலைவராக, ஆட்சியாளனாக,-வரமுடியுமே அல்லாமல், இந்த இந்தியக் கூட்டாட்சி என்பது உளளவரையில் தமிழன் ஒருவன் ஒருநாளும் ஆட்சிக்கு வரமுடியாது. தமிழின் உரிமை ஆட்சிக்கு வரும்வரை, தமிழன்-தமிழ்-தமிழ்நாடு-ஒருநாளும் உரிமையற்ற தன்மையிலிருந்து, அடிமைக் குடியாய் இருப்பதிலிருந்து, கடுகளவும் மாறமுடியாது.

ஆகவே, **இந்தப் பெருங்கேட்டிலிருந்து தமிழ்நாடும், தமிழனும், தப்பிப் பிழைத்து விடுதலை பெற வேண்டுமானால், இந்தியக் கூட்டாட்சி என்கிற பார்ப்பன ஒரே ஆளுமை வல்லதிகார ஆட்சியில் இருந்து, விலகித் தமிழ்நாட்டை உரிமைத் தமிழ்நாடு ஆக்கிக் கொண்டாலன்றி, வேறு எக்காரணத்தாலும் எக்கிளர்ச்சியாலும் முடியவே முடியாது** என்பதைத் தமிழ் மக்கள் உணரவேண்டுமாய் வேண்டிக் கொள்கிறோம்.

4. *இளைஞர் சிந்திக்கவேண்டிய காலம் வந்துவிட்டது !*

ஈகம் (தியாகம்) என்பது சிறைத்தண்டனை பெறுவதுதான் என்று பலரும் கருதிக் கொண்டிருக்கிறார்கள். ஈகம் என்பது தன்னல மறுப்பு என்ற பொருளைக் கொண்டதாகும். தன்னல மறுப்பு என்பது தனது உயிரைப் பலி கொடுப்பது என்பதை இறுதியாகக் கொண்டதாகும்.

இப்படிப்பட்ட தன்னல மறுப்புக்கொண்ட ஓர் ஆயிரம் வீரர்கள் முன்வந்தால்தான் தமிழ்நாடு தன்னுரிமைத் தமிழ்நாடாக ஆகமுடியும்.

இளைஞர்கள் இதை நல்லபடி சிந்தித்து முடிவு செய்து கொண்டு, செயலில் ஈடுபட வேண்டிக்கொள்கிறேன். சிந்திக்கவேண்டிய காலம் நெருங்கிவிட்டது என்பதற்காகத்தான் நான் **இந்த எச்சரிக்கைச் சங்கை ஊதுகிறேன்.**

—***பெரியார்-95*** ஆவது பிறந்த நாள் மலர்.

5. *தனித்தனிக் கிளர்ச்சிகள் நடத்துவதால் என்ன பயன் ?*

'மைல்' கற்களில் இந்தி எழுதப்படுவதை எதிர்த்து ஒரு போராட்டம்! உண்ணா நோன்பு!

'ஆகாசவாணி'யை எதிர்த்து ஒரு போராட்டம்! உண்ணா நோன்பு! மறியல்!

அஞ்சல் அட்டை, உறை, பணவிடைப் படிவம் இவற்றில் இந்தி இருப்பதை எதிர்த்து ஒரு போராட்டம்! மறியல்! கிளர்ச்சி !

-இப்படித் தனித்தனியாகக் கிளர்ச்சிகள் நடத்துவதனால் கொள்கை நோக்கு (இலட்சியம்) எந்த அளவுக்குக் கைகூடும்? எந்த அளவு (ஏற்கனவே இருந்து வரும்) இக்கேடு நம்மைவிட்டு நீங்கும் ?

தனிப்பட்டவர்களுக்கும், கட்சிக்காரர்களுக்கும் விளம்பரம், ஒப்போலை (ஓட்), 'ஈக(தியாக) முத்திரை -இவை கிடைக்குமே தவிர, செயலில் இந்தி ஒழிப்புக்கு எந்த அளவு பயன்படும் ?

-எனவே, இந்தி என்ற நச்சுமரத்தின் ஆணி வேரைக் கல்லியெறிய ஒரே வழிதான் உண்டு. அது தான் இன விடுதலை.

—***பெரியார்-95 ஆவது*** பிறந்த நாள் மலர்.

6. *சட்டத்தைப் பார்த்து அஞ்சிவிடாதீர்கள் !*

நான் மூன்று ஆண்டுகளுக்கோ, பத்து ஆண்டுகளுக்கோ, நாடு கடத்தலுக்கோ, தூக்குக்கோ, மற்றும் பிரிட்டீசார்-பேராயக் கிளர்ச்சியின்போது கையாண்ட எந்தவகையான கொடிய, தீவிரமான அடக்குமுறைகளை(ப்போல்) நம்மீதும் கழகத்தின் மீதும் செலுத்தினாலும்கூட, அவற்றுக்கு அஞ்சி என் கொள்கையையோ, திட்டத்தையோ மாற்றிக் கொள்ளப் போவதில்லை.

கழகத் தோழர்களே ! தீவிரக் கொள்கையாளர்களே !

நீங்கள் மூன்று ஆண்டுத் தண்டனைக்கு அஞ்சிவிட வேண்டியதில்லை; அஞ்சிவிடவும் மாட்டீர்கள் ! **சட்டத்தைப் பார்த்து அஞ்சிவிட்டதாகப் பேர் வாங்காதீர்கள் !**

-பெரியார்; (12-11-57)

7. *இந்தியா என்ற நாடுஎன்றைக்கு இருந்தது ?*

நம்முடைய போராட்டம் இனப் போராட்டமாகும். தமிழ்நாட்டைத் தமிழன் ஆளவேண்டுமே தவிர, **தமிழன் அல்லாதவன் -தமிழ்நாட்டான் அல்லாதவன்- ஏன் ஆள வேண்டும்?**

தமிழ்மொழி, தமிழர் பண்பாடு, **தமிழர்களைக் கொண்ட தமிழ்நாட்டை, மாறுபட்ட வடநாட்டான்- வெளிநாட்டான்- ஏன் ஆளவேண்டும்?** அதுவும் ஆளுகிறவன் இருக்கிற இடமாகிய டெல்லிவும் ஏறத்தாழ 2000 கற்களுக்கு அப்பால் இருந்து இங்கே இருக்கிற நம்மை ஆளுவது என்றால், இஃது என்ன ஞாயம்? நமக்கு எப்படி நல்ல நேர்மை (நீதி) கிடைக்கும்?

[தொடர்ச்சி 5 ஆம் பக்கம்]

விடுதலை பெறமுனைவாய்

—பாவலர். ***சின்னப்பனார்***

தொடுப்பு

விடுதலை பெற முனைவாய்—தமிழா !
விடுதலை பெற முனைவாய்!

எடுப்பு

வடவர்வல் லாளுமைப் பிடிதனைப் போக்க
வண்டமிழ் நாட்டினைத் தனியர சாக்க (விடு)

முடிப்பு

1. நாடின்றி வாழ்ந்தவனா ?—நீ,நா
டோடியைச் சேர்ந்தவனா ?
பீடுடன் வாழ்ந்தவன் பெரும்புகழ் சூழ்ந்தவன்
நாடிதை ஆண்டவன் நல்லறம் பூண்டவன்(விடு)

2. சொந்தவுன் நாடிதடா—உன்
முந்தையர் ஆண்டதடா !
இந்திபம் பேசியே வந்தவன் ஆள்வதா ?
வந்திட்ட அவனிடம் உன்தலை தாழ்வதா? (விடு)

3. ஆளுமை வெறிமீறி—வடவன்
அதிதலைக் கனமேறி
காலதன் தூசென உனைமதிக் கின்றான் !
கனித்தமிழ் மொழியினை நாடழிக் கின்றான்! (விடு)

4. இந்தியா என்கின்றான்—அதன்மொழி
இந்திதான் என்கின்றான் !
இந்தெனும் சொல்வெறி அவன்கொண்டு
[விட்டான்!
இதைச்செயற் படுத்திட எண்ணங்கொண்
[டிட்டான்! (விடு)

5. கண்டத்தை நாடென்கிறான்—இந்தி
முண்டத்தை மொழியென்கிறான் !
பண்டைய வரலாற் றினைமறைக் கின்றான்!
பாரதப் பண்பா டெனக் கதைக்கின்றான்! (விடு)

6, பிறமொழி கலையினத்தை—அதன்
பண்பொடு நாடிவற்றை
மறைந்துவிட் டிந்தியம் செயத்துணிந் திட்டான்!
மறுத்தெதிர் இனமதை மடிக்களண் ணிட்டான் !
(விடு)

7. ஏமாந் திடுவாயேல்—இனிகாலத்
தாழ்த்தம் செய்வாயேல்,
போமே உன்னினம் புடவிதனில் இருந்து ;
ஆமே விடுதலை அதைத்தவிர் மருந்து ! (விடு)

தமிழ்நாடு தமிழருக்கே!

ஒய்ந்திடல் இல்லை,என் உள்ளமும்,
உணர்வும், உயிர்ச்செறிவும் !
தேய்ந்திட்ல் இல்லை,என் விரல்களும்
தாளும் ! திரிந்தலைந்து
சாய்ந்திடல் இல்லை,என் உடலும் ;
எனவே சலிப்பிலனாய்,
மாய்ந்திடல் வரையும் உழைப்பேன்,
உரைப்பேன், மக்களுக்கே !

தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தொகுதி-3) இதழ் எண் 75 (12-10-1986) (பகுதி 23-26

விழாக்கள் ! வேடிக்கைகள் ! விளையாட்டுகள் !

ஏழை நாடாகிய இந்தியாவில், இன்றைய நிலையில், எத்தனை யெத்தனையோ அரசியல், பொருளியல், இனவியல், மொழியியல் மக்கள் உரிமையியல், சட்டவியல், வாழ்வியல், தொழிலியல் உழவியல், வெளிநாட்டு, உள்நாட்டுப் பாதுகாப்பியல் முதலிய நூற்றுக்கணக்கான சிக்கல்கள் நாள்தோறும் கிளர்ந்து நாட்டின் அமைதியையே சீர்குலைத்து அலைக்கழித்துக் கொண்டுள்ளன.

இவற்றையெல்லாம் ஏனோதானோ, போக்கில் கண்டும் காணாததுபோல், அணுகிக் கொண்டிருக்கும் முதலாளியப் பார்ப்பனிய நடுவணரசு, '**கிடப்பதெல்லாம் கிடக்கட்டும். கிழவியைத் தூக்கி மணைமேல் வை**' என்னும் வகையில், உடனடியாகக் கவனிக்க வேண்டிய அத்தனைச் சிக்கல்களையும் விட்டு விட்டு, உலகின் எந்த நாட்டில் எந்த விளையாட்டு நடந்தாலும், அதில் பங்குகொள்ள இங்கிருந்து நூற்றுக் கணக்கில் விளையாட்டு வீரர்கள் என்னும் பெயரில் பார்ப்பனக் கத்துக்குட்டிகளை, பல்லாயிரக் கணக்கில் மக்கள் வரிப் பணத்தைச் செலவுசெய்து அனுப்பிவைப்பதும், அவர்கள் இளித்த வாய்த்தனமாக விளையாடிவிட்டுத் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகைகளைத் தின்று தீர்த்துவிட்டு, ஏதோ ஒரிரண்டு ஆறுதல் பரிசுகளையும் மூன்றுந்தர மெப்புதல்களையும் பெற்றுக்கொண்டு இஞ்சி தின்ற குரங்குகள் போல், நாடு திரும்புவதும், அங்கு அவர்கள் விளையாடிக் கிழிக்கும் கிழியை, இங்கு நாட்டிலுள்ள வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்கள் மணிக்கணக்காக ஒலி, ஒளிபரப்பிக் காட்டி நிறைவடைவதும் நாள்தோறும் நடைபெறும் கூத்துகளாகி விட்டன.

உறுதியான செயல் திட்டங்களையும் அறிவு நல முயற்சிகளையும் ஊக்குவிக்காத அரசு, இப்படி விளையாட்டு வேடிக்கைகளில் தண்ணீர்போல் பணத்தைச் செலவழிப்பானேன், என்று ஆராய்ந்து பார்த்தால் ஓர் உண்மை விளங்காமல் போகாது.

பொதுவாக, எந்த நாட்டின் செயற்பாடுகளிலும் நாட்டின் எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் இளைஞர்களுக்கான செயல்திட்டக் கூறுகள் மிகுந்திருத்தல் வேண்டும். நாட்டை நாளைய நிலையில் ஆளுமை செய்து கட்டிக்காக்கும் பொறுப்பையும் கடமையுணர்ச்சியையும் அவற்றுக்கான தகுதிப் பாடுகளையும் இளைஞர்களிடம் இன்றிருந்தே உருவாக்கி வளர்த்தல்வேண்டும். இஃது ஒரு நாட்டு அரசின் உறுதியான செயற்பாடாக இருத்தல்வேண்டும். ஆனால், இங்கு என்ன நடைபெறுகிறது.

இளைஞர்களின் சிந்தனைத்திறன், செயலூக்கம், வினைப்பாடுகள் அனைத்தும் விளையாட்டுகளிலும், வேடிக்கைகளிலுமே திசை திருப்பப்படுகின்றதை நாம் நாள்தோறும் மிக்க மனக் கலக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதாக விருக்கிறது. இளைஞர்களின் மூளை அவர்களை யறியாமல் சலவை செய்யப்படுகிறது. அண்மையில், சென்னையில் நடைபெற்ற 'கிரிக்கெட்' ஆட்டக்காரர்களுக்கு, அவர்களின் ஓய்வு நேரங்களில் வேத வகுப்புகள் நடத்தப்பட்டதை அறிந்தால், பார்ப்பனர்களின் உள்நோக்கங்களும், அரசின் கொள்கைகளும் விளங்காமல் போகாது

இன்றைய இளைஞர்கள், அரசியல் அழிம்புகளின் பக்கமே திரும்பிப் பார்க்க வியலாதவாறு, விளையாட்டு வேடிக்கைகளிலேயே தங்களின் முழுக் கவனத்தையும் வைத்திருக்கும்படி, மிக எச்சரிக்கையாகச் செயல்படுகிறது, இராசீவின் நடுவண் அரசு.

விளையாட்டுகள் என்ன, நாட்டில் உள்ள ஏழத்தாழ அறுபது கோடி ஏழை மக்களின் வறுமை நீக்கத்தை விட அவ்வளவு முகாமையானதோ ? இனி, எல்லா விளையாட்டுகளையும் விட '**கிரிக்கெட்**" என்னும் மட்டைப் பந்தாட்டம் அவ்வளவு என்ன, சுறுசுறுப்பும், உடல் திறமையும், அறிவுத்திறனும் கொண்ட விளையாட்டு ? சுறுசுறுப்பற்ற சோம்பேறிகளும், மெலுக்கான உடல்வாகு கொண்ட பணக்கார மொழுக்கான்களும், மேலாளுமைக்காரர்களும் மட்டுமே விளையாடும் இக் '**கிரிக்கெட்**' விளையாட்டில், பார்ப்பன இளைஞர்களே மிகுதியும் பங்குகொண்டிருப்பதால், அதற்கே இவ் வரசு அதிக முகாமையும் பெருமையும் கொடுக்கிறது.

இனி, இவ் விளையாட்டுகளைப் போலவே, திரைப்படங்கள், நாடகங்கள், ஆடல்கள், பாடல்கள் முதலிய அனைத்து மேலாளுமை முதலாளியக் கலைக் கூறுகளில் எல்லாம் பார்ப்பனர்களும் பார்ப்பனத்திகளுமே மிகுந்திருப்பதாலும், அவற்றுக்கும்

(தொடர்ச்சி 3-ஆம் பத்திப் பார்க்க)

உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் சென்னை-திசம்பர் 27,28,-இல் நடத்தும்

தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு!

பேரன்புள்ள தமிழ் நெஞ்சங்களே !

வணக்கம்.

தமிழினம் இன்றைக்கு உள்ள நிலை மிகவும் கேடானதாகும். அரசியல் நிலையிலும், பொருளியல் நிலையிலும் மற்ற மொழி, கலை, பண்பாட்டு நிலைகளிலும் நாளுக்கு நாள் இது மிகவும் நலிந்து கொண்டும் வலுவிழந்து கொண்டும் வருகிறதை நாம் அனைவருமே உணர முடியும்.

நமக்கென்று உள்ள நம் அரசியல் கட்சித் தலைவர்களும், பிற சாதி, இனத் தலைவர்களும் அவரவர்களால் ஆன முன்னேற்ற முயற்சிகளைச் செய்து கொண்டு வந்தாலும், அவர்கள் ஒன்றிணைந்து ஒட்டுமொத்தமான வலுவை வருவித்துக் கொண்டு, அல்லது உருவாக்கிக் கொண்டு முயற்சி செய்வார்களேயானால், ஏதாவது ஒரு சிறு அளவிலாகிலும் நாளுக்கு நாள் நம் இனத்திற்கு ஒரு வகை முன்னேற்றம் ஏற்படும் என்று கருதலாம். ஆனால், நிலைமை அவ்வாறு இல்லை.

எனவே, இதைப் பற்றி நாம் அனைவரும் இக்கால் மிகக் கவலைப்பட வேண்டியிருக்கிறது. நம்மை ஆள்வதாகச் சொல்லிக் கொள்ளும் இந்திய அரசின் முதலாளியப் பார்ப்பனிய ஆட்சியாளர்களும் சரி, நம் தமிழ்நாட்டுத் தில்லியரசின் அடிமைகளும் சரி, நாளுக்கு நாள் நமக்கு நலிவுகளையும் மெலிவுகளையுமே உருவாக்கி வருவதுடன், இவ்வினம் மேலும் மேலும் சிதைந்து வலுக்குறைந்து போக வேண்டும் என்னும்படியாகவே செயலாற்றி வருகிறார்கள். எனவேதான் நாம் முழுமூச்சுடன் இறங்கி, ஏதாவது உருப்படியாகச் செய்தாக வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விட்டது.

இம் முயற்சியில் மற்றவர்களை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்பதும், 'பூனைக்கு யார் மணி கட்டுவது' என்னும் கதையாகவே முடிந்துவிடும் என்று கருதவும் அஞ்சவும் வேண்டியிருக்கிறது.

எனவே, நம் தமிழினத்தைப் பற்றி நாம் எதிர்காலத்தில் என்னென்ன முயற்சிகளை எடுத்துக் கொண்டு சிந்திக்கவும் செயலாற்றவும் வேண்டும் என்பது பற்றி, நாம் அனைவரும் கூடிப் பேசித் தீர்மானிப்பது, என்று நம் உ. த. மு. க. மேனிலைச் செயற்குழு தீர்மானித்து 'தமிழின எதிர்காலத் தீர்மானிப்புக் கருத்தரங்கு' என்னும் ஒரு கருத்தரங்கைக் கூட்டுவதற்கு முடிவெடுத்தது.

அக் கருத்தரங்கு வரும் திசம்பர் மாதம் 27,28-ஆம் பக்கல்களில் சென்னையில் நடைபெறவிருக்கிறது என்பது முன்னமேயே தெரிவிக்கப் பெற்றுள்ளது. அ'து ஒரு வரலாற்றுச் சிறப்புடைய கருத்தரங்கு ஆகும். அக் கருத்தரங்கிற்கு, மாணவர்கள், இளைஞர்கள், ஆசிரியர்கள், தொழிலாளர்கள், **உழவர்கள், தொழில் முதல்வர்கள், பல கட்சித் தலைவர்கள், கலைஞர்கள், அறிஞர்கள் ஆகிய பல்வேறு துறைகளில் உள்ள ஆடவர் பெண்டிர் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு, நல்லபடியான, உருப்படியான, உறுதியான ஒரு முடிவெடுக்க உதவும்படி நம் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.**

இக் கருத்தரங்கை நடத்தி முடிக்க ஏராளமான பொருள் செலவு ஆகும் என்று கருதுகிறேன்.

இச் செலவுகளுக்காகும் பெருந்தொகையை ஆங்காங்கு அன்பர்களிடம் நாடு முழுமையும் திரட்டிக் கொண்டிருக்க நேரமும் முயற்சியும் இன்றைய நமக்குப் போதாது. ஆகையால், இவ் வறிக்கையையும், முன் தமிழ் நிலம் இதழ் எண் 74-இலும், தென்மொழி சுவடி 22 ஓலை 10-இலும் வெளிவந்துள்ள அறிக்கையையும் கண்ணுற்ற, கண்ணுறும் அன்பர்கள், ஆதரவாளர்கள், கொள்கையுணர்வு உள்ளவர்கள், செல்வர்கள், கொடையாளிகள் ஆகிய அனைவரும் கூர்ந்து தங்களால் பேரளவு முடிந்த தொகைகளை உடனடியாக என் பெயருக்குப் பணவிடையாகவோ, வரைவோலையாகவோ' நேரிலோ அனுப்பி, இவ்வரும் பெருஞ் செயலில் பங்கு கொண்டு வரலாற்றுச் சிறப்புப் பெறும்படி கேட்டுக் கொள்கிறேன். பற்றுச் சீட்டுகள் அச்

தொடர்ச்சி 6 ஆம் பக்கம் பார்க்க)

[1 ஆம் பத்தித் தொடர்ச்சி]

இந்த நாட்டு அரசு, வேறெந்த நாட்டிலுமே இல்லாதவாறு அத்துணை வாய்ப்புகளையும் வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். கலைகளும், நாகரிகங்களும் மிகுந்திருக்கும் மேலை நாடுகளிலும், சில கீழை நாடுகளிலும் கூட, திரைப்படங்கள், நாடகங்கள், ஆடல் பாடல்களில் இளைஞர்கள் இத்துணை அளவு மனமயக்கமும் உணர்வு வேகமும் கொண்டதை நாம் பார்த்ததில்லை. அங்கு இவற்றிலெல்லாம் பெரும்பாலும் பொழுது போகாத, நடுத்தர அகவை கடந்தவர்கள் சிலரையே, அங்குள்ள திரைப்பட அரங்குகளிலும், களி, காமக் கூத்தாட்ட ஆடல் பாடல் கலைக் கொட்டகைகளிலும் பார்க்க முடிந்தது. இவ்வேதுங்கெட்ட இந்தியாவில் அதுவும் தென்புற மாநிலங்களில் தாம், அதுவும் குறிப்பாகத் தமிழ்நாட்டில்தான், இத்துணையளவு திரைப்பட வெறியர்களைப் பார்க்க முடிகிறது. இந்நிலை, எதிர்காலத்தை எந்த திசையில் கொண்டுபோய்ச் செருகும் என்று கருதிப் பார்க்கவும் இயலாமல் இருக்கிறது.

இனி, இவற்றுடன் மத விழாக்களுக்கும், வேறு எப்பொழுதும் இல்லாதபடி, வேகமும் விளம்பரமும் அரசு ஆதரவுகளும் மிகுந்திருக்கின்றன. 'பார்ப்பனர்களையும் பணக்காரர்களையும் தவிர வேறு பாட்டாளிகளோ, உழவர்களோ, பொது மக்களோ சிறிதும் கொண்டாடாத, கொண்டாடினும் இங்கொன்றும் அங்கொன்றுமாக நிகழ்த்தும் நிலையில் உள்ள இராமநவமி, கிருட்டிண செயந்தி, சிவராத்திரி, விநாயக சதுர்த்தி, நவராத்திரி, ஓலிப் பண்டிகை, ஐயப்ப விரதம், விசயலட்சுமி விரதம், தீபாவளி முதலிய முழுப் பார்ப்பன விழாக்களுக்கு அவற்றின் கொண்டாட்டங்களைவிட, 'நாடு முழுதும் கொண்டாடப்பட்டன' என்று பொய்யாகவும், புளுகாகவும், திமிர்த்தனமாகவும் பார்ப்பனியத்தைப் பரப்பும் கொடுமையாகவும். 'கதைக்கும்' வெளிச்சம் போட்டுக் காட்டும் வானொலி, தொலைக்காட்சி விளம்பரங்களே மிகுதி !

தன் கைகளில் அறிவியல் கருத்துப் பரப்புக் கருவிகள் கிடைத்துவிட்ட அகங்காரத்திலும், இறுமாப்பிலும் அரசும் அங்குள்ள பார்ப்பன அதிகாரிகளும் செய்து வரும் மக்களைத் திசைதிருப்பும் முயற்சிகளுக்கும் ஏமாற்றும் கரவுத்தனங்களுக்கும் எப்பொழுதுமே ஒரு முடிவு உண்டு என்பதைத் தொடர்பான அத்தனை அழிம்பன்களும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மொத்தத்தில், இராசீவின் இந்தியப் பார்ப்பன முதலாளிய- மனு (அ)தர்ம ஆட்சி கடைப்பிடித்து வரும் கொம்மாளக் கூத்துகளும் அவற்றின் நோக்கங்களும், மக்கள் அனைவர்க்குமே விளங்காவிடினும், எதிர்கால நாட்டு நலனிலும் மக்கள் முன்னேற்றங்களில் அக்கறையும் கவலையும் கொண்ட நாட்டிலுள்ள அரசியல் சார்பற்ற நடுநிலையாளர் ஒரு சிலருக்காகிலும் விளங்காமல் போகாது. அவ் வகையில் அரசின் கரவான நோக்கங்கள் இவை :

1. ***பொதுமக்களைத் திசைத்திருப்ப-***

பார்ப்பன• மதப் பண்டிகைகள், கொண்டாட்டங்கள், புராண, இதிகாச (இராமாயண, மகாபாரத)க் கூத்தடிப்புகள், கதை,கலைப் பொழுது போக்குகள், முதலியவை.

2. ***இளைஞர்களையும் மாணவர்களையும் மூளைச்சலவை செய்யவும் திசைதிருப்பவும்-***

விளையாட்டுகள், கழிகாமத் திரைப்பட ஊக்குவிப்புகள், அவற்றின் ஒலி, ஒளி பரப்புப் பாடாவதிகள் !

3. ***அரசியல் உணர்வுள்ள கட்சித்தலைவர்கள் தொண்டர்கள் இவர்களின் கவனங்களையும் திசைதிருப்ப-***

இந்தித் திணிப்பு முயற்சிகள், அதிகார மாற்றங்கள், அமைச்சர்கள், ஊர்வலங்கள், உலக நாடு சுற்றுலாச் செய்திகள் முதலியவை.

ஆக, இன்ன, இன்ன தந்திரமந்திர, மாய்மாலச் செயல்கள், ஒலி, ஒளிக் காட்சிகளுடனும், பொதுமக்களின் ஏராளமான வரிப்பணச் செலவுடனும் மதிதகு, மாண்புமிகு, இராசீவ்காந்தி அரசு இந்தியாவைச் சீரழிவுடனும் சிரைப்புடனும் ஆட்சி நடத்தி வருவதும் நாம் அந்தக் கொடுமையான காலத்தில் குடிமக்களாய் இருந்து கொண்டு வாய்மூடி ஊமைகளாய் வாழ்ந்து வருவதும் கொடுமை, மிகக் கொடுமை, கூறவொண்ணா மிகக் கொடுமை- என்க ! 0

கலை பண்பாட்டுப் புரட்சி செய்வோம்!

தந்தை பெரியார் 108 ஆம் பிறந்த நாளில், ‘தமிழ் இன விடுதலைக் கழகம்’ தொடங்கியது!

தந்தை பெரியாரின் 108-ஆவது பிறந்தநாளாகிய 17-9-86-இல், தஞ்சை மாவட்டம் மயிலாடுதுறையில் அவரின் மூலக் கொள்கையாகிய தமிழ்நாட்டு விடுதலையை முன் வைத்துத் ‘தமிழின விடுதலைக் கழகம்’ என்னும் பெயரில், புதிய ஓர் அமைப்பு தொடங்கப் பெற்றது. அதன் தொடக்க விழாவும், தந்தை பெரியாரின் 108-ஆவது பிறந்த நாள் விழாவும் ஒருங்கே கொண்டாடப் பெற்றன.

விழா நாளாகிய 17-9-86-க்கு 10 நாள்களுக்கு முன்பிருந்தே, மயிலாடுதுறை நகரில் பற்பல இடங்களிலும் இனவிடுதலை, நாட்டு விடுதலை குறித்துத் தலைவர்கள் பலரின் கருத்து விளக்கங்களும், புள்ளி விளக்கங்களும், பெரும் பெரும் தட்டிகளில் எழுதி வைக்கப் பெற்றுப் பொதுமக்களின் கவனத்தைக் கவருகின்ற வகையில் ஏற்பாடுகள் செய்யப் பெற்றன.

நகரப் பேருந்து நிலையத்தைச் சுற்றிலும், கடைத் தெருக்களின் பல முகாமையான இடங்களிலும் மூலை முடுக்குகளிலும் பல்வேறு கருத்துகளைத் தாங்கிய தட்டிகளும் வண்ணச் சுவரொட்டிகளும் சிறப்பாகக் காட்சியளித்தன. இந்த ஏற்பாடுகளையெல்லாம் ‘தமிழ் இன விடுதலைக் கழகத்’தைச் சேர்ந்த பேராளர்களும் இளைஞர்களும் மிக சிறந்த முறையில் செய்திருந்தனர். தட்டிகள் பல முன்னரே காவல் துறையினரால் கைப்பற்றப் பட்டுப் பிறகு தலைவர்களின் தலையீட்டுக்குப் பின், அவை திருப்பித்தரப்பெற்று மீண்டும் ஆங்காங்கே கட்டப்பட்டிருந்தன. இந் நிகழ்ச்சி அக்கழகத்திற்குத் தொடக்கத்திலேயே நல்ல விளம்பரத்தைக் கொடுத்தது எனலாம்.

விழா நாளான 17-9-86 அன்று, பெரியார் பிறந்தநாளையொட்டி, பாயும் புலியையும், இரண்டு துமுக்கி (துப்பாக்கி)களையும் நடுவில் கொண்டு, நீளவாட்டில் முக்கால் பகுதி சிவப்பும், கால் பகுதியில் மூன்று மஞ்சள்நிற விடிவெள்ளிகளுடைய கருப்பு நிறமும் கொண்ட, தமிழின விடுதலைக் கழகத்தின் கொடிகள் நகரின் பல்வேறு பகுதிகளிலும் ஏற்றப் பெற்றன. இக் கொடியேற்றத்தை மயிலாடுதுறை வழக்கறிஞரும் பெரியாரின் தமிழின விடுதலைக் கொள்கையில் பெரும் ஈடுபாடும் உறைத்த நம்பிக்கையும் உறுதியும் கொண்டவரும் ஆகிய மறமிகு தி. இராமதாசு அவர்களையும், அவரைப் போலவே பெரியாரின் கொள்கையிலும் செயற்பாட்டில் மிகத் தீவிரமும் அஞ்சா நெஞ்சமும் கொண்ட மெய்த்தொண்டர் மறமிகு கி. இராசமாணிக்கம் அவர்களையும், தலைமையாகக் கொண்ட வீர இளைஞர்கள் பலர் மிதிவண்டிகளில் ஊர்வலமாகச் சென்று, நிகழ்த்தி வைத்தனர்.

அன்று மாலை 7 மணியளவில் நகரப்பூங்காவை ஒட்டிய திடலில் அழகு நிறைந்த மேடை அமைப்புடன் தொடக்க விழாக் கூட்டமும் பெரியாரின் 108-ஆவது பிறந்தநாள் விழா நிகழ்ச்சியும் ஒருங்கே தொடங்கின.

நிகழ்ச்சிகளுக்கு இளைஞர் மறமிகு த. பிளாட்டோ தலைமை ஏற்றூர். மறமிகு கதிர்-சண்முகம் வரவேற்புரை நிகழ்த்தினர், கூட்டத் தொடக்கத்தில் ‘தமிழ் இன விடுதலைக்கழகம் ஏன்?’ என்னும் விளக்க நூலும் வெளியிடப் பெற்றது.

நூலை வழக்கறிஞர் மறமிகு. தி. இராமதாசு அவர்கள் வெளியிட்டார்கள். முதல் நூலை பழம் பெரும் பெரியாரின் பெருந்தொண்டர் மறமிகு எசு. டி. விவேகி அவர்கள் பெற்றுக் கொண்டார்கள். பின்னர் கூட்டத்தில் பலரும் உருபா ஐந்து கொடுத்து நூல்களை விலைக்கு வாங்கிக்கொண்டனர்.

நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றவிருந்த தெலுங்கு இன விடுதலைக் கழகத்தலைவர் பர். கோகுல்மித்ரா அவர்கள், ஐதராபாத்தில் நடைபெறும் இடஒதுக்கீடு எதிர்ப்புக்கு ஈடு கொடுக்க வேண்டிய நிலையிலிருந்ததால் கூட்டத்தில் கலந்து கொள்ள இயலாமை பற்றித் தொலைவரி வழித் தெரிவித்திருந்த செய்தியும் வாழ்த்தும் கூட்டத் தொடக்கத்தில் படிக்கப் பெற்றன, அது போலவே கழகத் தொடக்கத்தை வாழ்த்தி முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் முதலியோர் விடுத்திருந்த செய்திகளும் படிக்கப் பெற்றன.

தலைவர் தம் முன்னுரையில் தேசியப் புரட்டு, இன விடுதலையின் தேவை, பார்ப்பனீயத்தின் சூழ்ச்சி முதலியவை குறித்து விரிவாகப் பேசினர்.

அவரையடுத்து மறமிகு தோழர்கள் கு. பன்னீர்செல்வம், வீர. கோவிந்தராசன் அமுதன், பி. இராசேந்திரன். ச. நடராசன், இராம. இராசசேகரன். 6 அகவைச் சிறுமி செல்வி உண்மை ஆகியோர் உரை நிகழ்த்தினர். பெரியாரின் அருமை பெருமைகளைச் சிறுமி. உண்மை பாடிய பொழுது கூட்டத்தினர் மிகவும் ஆர்வத்துடனும் அமைதியாகவும் கேட்டனர். உரை நிகழ்த்திய தோழர்கள் ஈழத்தமிழர் படும் அல்லல்கள் குறித்தும், அதைத்தடுக்க முடியாத தமிழினம் விடுதலை பெறவேண்டிய தேவை குறித்தும் உணர்வு பொங்க எடுத்துரைத்தார்கள். சிலர் தமிழ்நாட்டு விடுதலை பெற உயிரைப் பணயம் வைப்பதாகவும் சூளுரைத்தார்கள். குடந்தை வீரமுரசு என்னும் தோழர் தமிழ் இனம் உடனடியாக விடுதலை பெற்றாக வேண்டுமென முழங்கினர்.

அவர்களைத் தொடர்ந்து, மறமிகு கி. இராசமாணிக்கம் பேசுகையில், பெரியார் கொள்கைகளை உண்மையாகச் செயல்படுத்தும் தொண்டர் தாம் என்பதை மெய்ப்பிக்கும் வகையில், திராவிடர் கழகத்திலிருந்து தாங்கள் பிரிந்து ஏன் இப்படி ஒரு கழகத்தைத் தொடங்கவேண்டி வந்தது என்பதைத் தக்கக் காரணங்களையும் சான்றுகளையும் காட்டி, பெரியாரின் மூலக் கொள்கை தமிழினத்தையும் தமிழ்நாட்டையும் மீட்பதே என்று கூறி வீறுரையாற்றினர். அவர் மேலும் பேசுகையில் பெரியார் தொடங்கிய திராவிடர் கழகம் இக்கால் எவ்வாறு அவர்கொள்கையைத்திசை திருப்பும்போக்கில் நடையிடுகிறது என்பதைப் பலவாறான நிகழ்ச்சிகளைக் கூறி விளக்கினர். இறுதியாகத் தமிழ் இன விடுதலை தமிழரின் பிறப்புரிமையென்றும், இரந்து கேட்டுப் பெறுவதில்லை என்றும் முழங்கினர்

அடுத்துப் பெரியார் சம உரிமைக்கழகத்தைச் சார்ந்த முதுபெரும் தொண்டரும், பெரியாரின் பெருந்தொண்டரும் ஆகிய பெரியவர் திரு எசு டி. விவேகி அவர்கள் உரை நிகழ்த்தினர். அவர் பேசுகையில் பெரியார் கொள்கைகளில் உள்ள சிறப்புகள், இன நல நோக்கும், இந்த நாட்டை மீட்டெடுக்கும் குறிக்கோள்கள்- இவை பற்றி மிக விரிவாகவும் விளக்கமாகவும் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் ‘இந்தியப் பொதுவுடைமைக் கட்சி 60 ஆண்டுகளாக இந்திய மண்ணில் விளைவித்தது என்ன என்று சாடினர். பொதுவுடைமைய வளரவிடக்கூடாது என்பதற்காக பார்ப்பனர்கள் பொதுவுடைமைக் கட்சிகளில் ஊடுருவி உண்மைச் சமநிகர்மை நாட்டில் தோன்றாமல் செய்கிறார்கள் என்றும், எந்த ஒரு நாட்டிலும் பொதுவுடைமையர்கள் 25 ஆண்டுகளில் ஆட்சியைக் கைப்பற்றாமலில்லை என்றும், அமெரிக்க, பிரிட்சு வல்லரசுகள் இந்தியாவில் இந்துமதத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துப் பொதுவுடைமைக் கொள்கை பரவ விடாமல் பாதுகாக்கின்றனர் என்றும், எனவே பார்ப்பனீயத்தை -இந்திய தேசியத்தை இந்து மதத்தை ஒழித்தால் ஒழிய, ஏழை எளியவர்கள் வாழ்வு மலர வழியில்லையென்றும், அதற்கு ஒரே வழி தமிழ்இனம் உடனடியாக விடுதலை பெறுவதுதான் என்றும் கூறினர்.

அடுத்துப்பேசிய தமிழ் இன விடுதலைக்கழகத்தின் நெறியாளர் வழக்கறிஞர் தி. இராமதாசு தொடக்கத்தில் கழகம் தொடக்கப்பட வேண்டியதன் கட்டாயத்தை எடுத்துரைத்தார். அவர் தாம் முன்னர் நெடுங்காலம் இருந்து பிரிந்து வந்த திராவிடர் கழகத்தின் நடைமுறைகளில் கண்ட பல குறைபாடுகளைக் கூறி, தாம் கொண்ட பெரியார் கொள்கைகளில் முகாமைக் கொள்கையாக உள்ள தமிழின விடுதலையைத்தாம்முனனிருந்த திராவிடர் கழகம் கைவிட்டு விட்டதாலும், அதன் செயற்பாடுகள் தமக்கு நிறைவளிக்காததாலும் தாம் அக்கொள்கையைச் செயற்படுத்துவதற்கான புதிய கழகத்தைத் தோற்றுவிக்க வேண்டியிருந்தது என்பதைப் பல விளக்கச் சான்றுகளுடன் கூறினர்.

இறுதியாக நிகழ்ச்சியின் சிறப்புச் சொற்பொழிவாளரும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் முதல்வரும் ஆகிய பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் நீண்டதொரு சிறப்புரை நிகழ்த்தினர்.

அவர் பேசுகையில், தமிழ் மொழியின் தமிழினத்தின் தொன்மையையும் சிறப்பையும் வரலாற்றடிப்படையில் விளங்கக் கூறி, அனைத்து நிலைகளிலும் உரிமைகளிலும் தாழ்ந்திருக்கும் இத்தமிழ்இனத்தின் உரிமைகளை மீட்டுக் கொடுக்கும் முயற்சியில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தந்தை பெரியாரே என்றும், திருவள்ளுவர் வகுத்த பொதுத் தொண்டுக்கு ஆன இலக்கணத்திற்கு ஒரே இலக்கியமாகப் பெரியார் திகழ்ந்தார் என்றும், அவருடைய நினைவு நாளில், அவருடைய உண்மையான, தலையாய கொள்கையான தமிழின தமிழ்நாட்டு விடுதலைக் கொள்கைக் கென்றே ஒரு கழகம் தோற்றுவிக்கப் பெறுவதே மிகவும் பொருத்தமும் சிறப்பும் வாய்ந்தது என்றும் ‘இன விடுதலை’ என்னும் பெயரில். இதுவரை எந்த அமைப்பும் தோற்றுவிக்கப் பெறவில்லை என்றும், அவ்வகையில் இது தான் முதல் இயக்கமென்றும் இது நிலைத்து நிற்கச் செய்ய வேண்டும் என்றும் பேசினர்.

அவர் மேலும் கூறுகையில், ஐம்பதாயிரமாண்டு பழைமை சான்ற ஒரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஆண்ட பெருமை கொண்ட, தொன்மையான கலை, பண்பாடு, நாகரிகம் உடைய ஓர் இனம்- இத்தமிழ் இனம்- இன்று நாடற்று ஓர் அடிமையினமாக உள்ளதைச் சுட்டிக் காட்டி, அதை மீட்க, விடுவிக்க, அதே பெயரால் எழுந்த ‘தமிழ் இனவிடுதலைக்கழகத்துக்கு வாழ்த்துத் தெரிவித்து அது வாழும், வளரும் என்று கூறினர்.

மேலும், இந்தி வல்லாண்மையை எதிர்த்து எந்த வகையான போரும் செய்ய அணியமான நிலையில் தமிழ் இனம் இன்றுள்ளது என வடநாட்டு வல்லாளுமை அரசுக்கும் இந்தி வெறியர்களுக்கும், தலைமை அமைச்சர் இராசிவ் காந்திக்கும்எச்சரிக்கை விடுத்தார்.

இறுதியில், இரவு 1-40 அளவில் மறமிகு பிளாட்டோவின் முடிவுரையுடனும் நன்றியுரையுடனும் நிகழ்ச்சி நிறைவுற்றது.

-நம் சிறப்புச் செய்தியாளர்

ஆர்த்தெழுவாய் தமிழினமே!

— வள்ளிகேள்வன் —

இந்திமொழி பயில்வதனுல் பிழைப்புக் காக
எப்படியும் வழிகிடைக்கும் எனும்எண் ணத்தைச்
சிந்தையிலே புகுத்துகிருர் தமிழ மாந்தர்
செந்தமிழின் திறம்மறந்து கிடப்ப தாலே!
கந்தமிகு மென்பட்டுத் துகில் இருக்கக்
கந்தையினை உடுத்துகின்ற மூடர் உண்டோ?
இந்திவழிக் கல்விமுறை ஏற்றுக் கொண்டால்
இன்றிருக்கும் நிலைமாறி இன்னும் தாழ்வோம்! 1

இந்தியர்கள் எனப்பகுக்கும் சொற்கள் எல்லாம்
இந்திமொழி வளர்ச்சிக்கே பாதை காட்டும்!
மந்திகளா தமிழரெலாம்? மானம் கெட்டு
மந்தைகளாய்த் திரிகின்ற கூட்டம் தானு?
இந்திமொழித் திணிப்பொன்றே கொள்கை என்னும்
வெறியினிலே நடுவணர சிருக்கும் போது
செந்தமிழை மீட்பதற்கே நாம்ம றந்தால்
தென்னாட்டின் பண்பாடிங் கழிந்தே போகும். 2.

மாதிரிப்பள் ளிகளென்று வைப்ப தெல்லாம்
மதிதன்னைக் கருவறுக்கும் கொலைக்கூ டங்கள்!
சீர்திருத்தக் கல்வியிலே என்று சொல்லிச்
செந்தமிழர் பண்பாட்டுச் செல்வம் முற்றும்
ஆதியுடன் வேரறுக்க முனைந்து விட்டார்!
அன்றுமுதல் என்றைக்கும் வடவர் தெற்கின்
ஆதிமுதற் பகைவர்தாம் கருத்திற் கொள்வீர்!
அவர்காட்டும் கவர்ச்சியெலாம் கொடிய நஞ்சே! 3

வெறுப்பின்றி இந்திபயி லுங்கள் என்னும்
வெறும்பேச்சுக் கரவுப்பேச் சறிவாய் தம்பி!
தெருப்படியில் தாளிகைகள் பிரித்து வைத்துத்
திரைப்படத்துச் செய்திகளும் ஆச்சார் யாளின்
உருப்படியாம் தமிழ்கெடுக்கும் உரைத்தொ குப்பும்
உளங்கெடுக்கும் பாலுணர்வுக் கதையும் பேச்சும்
விருப்பமடி எனப்படித்துக் கொண்டி ருந்தால்
மேன்மையெலாம் நெரும்படியில் பஞ்சாய்ப் போகும்!

கூவிமகிழ் குயில்தன்னைக் குரைக்க வைக்க
குத்துகிருன் கோல்கொண்டு தில்லிக் காரன்
பாவுபெருங் காட்டகத்தில் விலங்கின ங்கள்
பயின்றிடுமோ ஒற்றுவைக்கு நரியின் ஊளை!
மேவுபுகழ் செந்தமிழை உயிரோட் டத்தை
விழிச்சுடரை இழந்திங்கு மேன்மை யுண்டோ?
ஆவிஒரு முறைபோகும் அதற்கு முன்னே
ஆளவரும் இந்தியினைப் புதைப்போம் ஆணை! 5

கொதிக்காத தீக்குழம்பு, மணத்தை அள்ளிக்
கொட்டாத மலர்த்தோட்டம், கீழ்வா னத்தில்
உதிக்காத செம்பரிதி, பூவில் ஊறும்
தேனுண்ண மாட்டாத வண்டு, தென்றல்
எதற்காக எனக்கேட்கும் பைம்பூஞ் சோலை
எவ்விடத்தும் கண்டதில்லை! தமிழர் வீரம்
அதிகாரத் தில்லிக்கிங் கடங்க லாமோ?
ஆர்த்தெழுவாய் தமிழினமே! தமிழைக் காக்க!

தமிழக விடுதலையை மீட்போம், வாரீர்!

தந்தை பெரியாரின்...தமிழ்நாட்டு விடுதலையே (தொடர்ச்சி)

உலக நிலப்படத்தை வாங்கிப் பாருங்கள். அந்தந்த நாட்டு ஆட்சி அந்தந்த நாட்டு மக்கள்- அந்தந்த நாட்டு மொழி பேசுகிறவர்கள்- அந்தந்தக் குமுகாயப் பண்பாட்டுக்காரர்களின் கையில்தான் இருக்கிறதே தவிர ,வேறு நாட்டுக்காரன்-மொழிக்காரன்- அவர்களை ஆளுவதாகக் காட்ட முடியுமா? ஐரோப்பாக் கண்டத்தில் மட்டும் ஏறத்தாழ 25 நாடுகள் இருக்கின்றன. இசுப்பெயின், பிரான்சு, டென்மார்க், ஆலந்து, போலந்து, பெல்சியம், கிரீசு, சுவிட்சர்லாந்து, ஆசுத்திரியா, இத்தாலி, செருமனி உருசியா, யூகோசுலாவியா; செக்கோசுலாவியா, நார்வே, சுவீடன், பின்லாந்து, அல்பேனியா போன்ற பல நாடுகள் இருக்கின்றனவே. இவற்றிலெல்லாம் அந்தந்த நாட்டுக்காரன், மொழிக்காரன் தான் ஆளுகிறானேயொழிய பிறன் ஆளுகிறான்?

இந்தியா என்ற நாடு என்றைக்கு இருந்தது? முகமதியர் வெள்ளைக்காரர் ஆட்சிக்காலத்திற்கு முன் இருந்ததா? மனுதர்ம சாத்திரத்தில்- இராமாயணத்தில்- மகாபாரதத்தில் இருந்ததா? பின்னே இன்றைக்கு மட்டும் எப்படி இந்தியா என்ற நாடு முளைத்தது? என்றைக்குப் பாரத தேசம் இருந்தது? தமிழனுடைய இலக்கியங்களில் இருந்ததா? புராணங்கள் 56 தேசங்கள் என்றுதானே குறிப்பிடுகின்றன. இன இழிவு நீங்கவே விடுதலை கேட்கிறோம்.

-பெரியார், (12-11-57)

8. பிறந்தநாள் செய்தி. 1973 செப். 17.
தந்தை பெரியாரின் இறுதிக் கட்டளை.

எனது 95-ம் ஆண்டுப் பிறந்தநாள் தொடக்கத்துக்கு வழமைபோல் ஆண்டு மலரில் ஒரு கட்டுரை எழுத வேண்டியிருக்கிறது. அதை முன்னிட்டு இக்கட்டுரை எழுதுகிறேன். அப்படி எழுதப்படும் இந்தக் கட்டுரைகள் என்றால் ஆண்டு மலர்களுக்கு எழுதப்படும் கட்டுரைகள். என்றால் ஆண்டு மலர்களுக்கு எழுதப்படும் கட்டுரைகளில் இதுவே கடைசியான கட்டுரையாக இருந்தாலும் இருக்கலாம். ஏன் இப்படி எழுதுகிறேன் என்றால் அடுத்த ஆண்டு மலர் எழுதப்பட வேண்டிய காலத்தில் நான் இருப்பேனோ இல்லையோ என்ற சிக்கல் மாத்திரமல்லாமல் எழுதும்படியான வாய்ப்பு இருக்குமோ இருக்காதோ என்பது முகாமையான செய்தியாகும்.

ஏனெனில் இன்னும் நாம் இருப்பது போலவே அஃதாவது இந்திய ஆட்சி என்பதற்குள் குடிகளாகவும், இனத்தில் நாலாம் சாதி (சூத்திர மக்களாகவும்) சட்டப்படி, சாத்திரப்படி, பார்ப்பானின் 'தாசி'மகன் என்னும் பெயருடன் நம் தாய்மார்கள் பார்ப்பானின் 'தாசி'களாகவும் இருக்கும் தன்மையிலேயே இருப்போமோ என்கிற கருத்தைக் கொண்டே இப்படி எழுதுகிறேன்.

9. என்றைக்கும் நாம் இந்துதான் ;
தாசிமகன் தான் !

இந்திய அரசியல் சட்டப்படி நாம் இந்திய ஆட்சியில் குடிகளாக இருக்கும் வரை, இந்துவாக அஃதாவது கிறித்துவாகவோ முசுலீமாகவோ நாம் மதம் மாற்றிக்கொள்ளாதவரை நாம் நம் பண்டார 'சன்னதிகள்' உட்பட பவுத்தனுக்கும் செயினனுக்கும் சமானமாக இருக்கும்படியாக இருந்தாலும், பகுத்தறிவுகக்காரனாக இருந்தாலும், வேறு எந்தப் பெயரில் வாழ்ந்து வருபவனாக இருந்தாலும், சூத்திரனாகத்தான் பார்ப்பானின் தாசிமகனாகத் தான் இருந்தாக வேண்டும்.

10. நம்மில் பலர்சிறையில் இருக்க நேரிடலாம்.

இதுதான் இன்றைய இந்திய அரசியல் சட்டமாகும், இந்தச் சட்டத்தைத் திருத்தவோ மாற்றவோ நம் மக்களுக்கு ஒரு நாளும் வலிமையோ உரிமையோ ஏற்படும் என்று கருதவே முடியாத நிலையில் இருக்கிறோம். அது மாத்திரமல்லாமல் இந்திய ஆட்சியில் இருந்து, தமிழ்நாட்டை விலக்கிக் கொள்ள (விடுவித்துக் கொள்ள) முயற்சி செய்தே ஆக வேண்டிய ஒரு கட்டாயமான அழுத்தமான நிலையில் இருக்கிறோம். இந்த முயற்சியில் நாம் இந்திய ஆட்சியிலிருந்து விலகிக் கொள்ளும்வாய்ப்பு ஏற்படுமா என்பது பற்றி நமக்கு முடிவு செய்து கொள்ள முடியாமல் இருந்தாலும் நம் முயற்சியில் நாம் பலர் சிறையில் இருக்க நேரிடலாம் என்கிறதாலேயேதான் இந்தப்படி எழுதுகிறேன்.

...நாம் உடனடியாக விடுதலை அஃதாவது இந்தியக் கூட்டாட்சியிலிருந்து விலகித் தன்னுரிமைத் தமிழ்நாட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டாக வேண்டியவர்களாக இருக்கிறோம். இம்முயற்சிக்கு இன்றைய நம் (தி. மு. க.) ஆட்சி இணங்கும் என்று கருத முடியாது. ஏனெனில், தி. மு. க. ஆட்சி விரும்புவது இந்தியக் கூட்டாட்சி ஆளுமைக்கு உட்பட்ட மாநிலத் தன்னாட்சிதான்.

மாநிலத் தன்னாட்சி (மாகாண சுயாட்சி) என்றால், அரசியலில்தான் ஏதோ சில மாறுதல்களைச் செய்து கொள்ள முடியுமே தவிர குமுகாயத் துறையில் அரசியல் சட்டத்திற்கு மாறாக ஒரு செயலும் செய்ய முடியாது.

11. 50 ஆண்டுகளாகத் தன்மான இயக்கம் செய்தது என்ன ?

நான் முதலில், நான் இந்து இல்லை என்று சொல்லிவிட்டால் இழிவு நீங்கி விடும் என்றுதான் கருதினேன். பிறகு சட்டங்களைப் பார்க்கத் தொடங்கிய பிறகு கிறித்தவர்கள், முசுலீம்கள் தவிர்த்த இந்தியாவில் உள்ள மக்கள் அனைவருமே இந்துக்கள்-இந்துக்கள் என்றால் சூத்திரர்கள், வேசி மக்கள்- என்று பல இடங்களில் காணப்படுகின்றன. ஆதலாலே தீவிர முயற்சி எடுக்க வேண்டும் என்று தோன்றுகிறது.

இன்று நம் நாட்டில் இந்துக்கள் எல்லோருக்குமே அரசியலில்தான் முகாமைக் கவனம் இருக்கிறது. அன்றியும் நாட்டுப் பிரிவினை என்றால் எல்லா மக்களுமே அச்சப் படுகிறார்கள். காரணம் பதவி கிடைக்காதே என்கிற காரணம் மாத்திரமல்லாமல் சிறைக்குச் செல்லவேண்டுமே என்று அச்சப்படுகிறார்கள். 50 ஆண்டுகளாகத் தன்மான [சுயமரியாதை] இயக்கம் செய்தது என்ன என்று பார்த்தால் சிறிது படிப்பு - பலர் பதவி அரசுப் பணி பெற நேர்ந்ததோடு அரசியலில் பார்ப்

பனர் கொட்டத்தை நல்ல அளவிற்கு அடக்கிற்று எனபதலலாமல் குமுகாயத் துறையில் உள்ள அடிப்படை இழிவு நலல அளவுக்கு வலுப்பெற்று விட்டது என்றுதான் சொல்ல வேணடும.

எனவே நாம் சட்டத்தைப் பற்றி அச்சப்படாமலும், பதவி கிடைக்காதே என்று கவலைப்படாமலும், உரிமைத் தமிழ்நாடு பெற ஒவ்வொருவரும் முடிவு செய்து கொண்டு முன்வர வேண்டியது தமிழன் ஒவ்வொருவனுக்கும் இன்றியமையாத செயல் என்பதைப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

'தன்னாட்சித் தமிழ்நாடு எனது குறிக்கோள்' என்னும் சொற்களை **ஒவ்வொருவரும்** கொள்கைச் சொல்லாகக் கொள்ள **வேண்டும்** என்று விரும்புகிறேன். பொதுமக்களுக்கு **இதுவே** கொள்கை முழக்கமாக இருக்க **வேண்டும் என்று** ஆசைப்படுகிறேன். பொதுமக்களே ! **இளைஞர்களே** ! பள்ளி, கல்லூரி மாணவர்களே ! **மாணவிகளே** ! உறுதி கொள்ளுங்கள் ! உறுதி கொள்ளுங்கள்!! உறுதி கொள்ளுங்கள். -(95-ஆவது பிறந்தநாள் மலர்.)

தமிழ்நாடு இந்தியக் கூட்டாட்சியிலிருந்து பிரிந்து தனி உரிமை நாடாகி விட்டால் தமிழ் நாட்டிற்கோ, இந்தியாவிற்கோ அல்லது இந்த உலகத்திற்கோ என்ன கேடு ஏற்பட்டு **விடும்**? தாய் நாடு தன்னுரிமை நாடாக ஆக்கப்பட வேண்டும் என்று வாயால் சொல்வதற்குக் கூட (அவன்) அஞ்சுவானேயானால், அவன் எந்த அளவுக்கு நாட்டுப் பற்றுடையவன் ஆவான்?

...மான உணர்ச்சி உள்ளவர்கள் பிரிவினைக் கொடி உயர்த்த வேண்டும். கட்சிச் சார்பற்ற முறையில் தமிழர்கள் மாநாடு ஒன்று கூட்டி, இந்தி ஆட்சி மொழியாக இருக்கக்கூடாது; தமிழ்நாட்டை முழு உரிமையுள்ள நாடாக ஆக்கிக்கொள்ள வேண்டும் 'என்று தீர்மானிக்க வேண்டியது. மானம், அறிவு, உரிமை உணர்ச்சி உள்ள மக்களின் கடமையாகும்.

...தமிழ்நாடு பிரிவினைக்கான செயல்களை நானே பார்த்துக் கொள்கிறேன். துணிவில்லாதவர்கள் சும்மா ஒதுங்கியிருந்தால் போதும்.

-விடுதலை 26-1-68

12. தமிழ்நாடு பிரிந்தே ஆகவேண்டும்!

எனக்குத் தெரியும் தன்மான இயக்கத் தோழர்கள் 100க்கு 100 பேரும் பிரிவினையை ஆதரிப்பவர்கள்தாம் ! தி. மு. க. வில் 90 பேரும், பேராயக் (காங்கிரசுக்) கட்சியில் 75 விழுக்காட்டுப் பேரும் உறுதியாகப் பிரிவினைக் கொள்கையை ஆதரிப்பவர்களே! எல்லாரும் தமிழர்கள் என்பதை உணருங்கள்!

குடும்பம், பதவி, படிப்பு,உறவு, பாசம் இல்லாத தமிழர்கள் என்னோடு போராட்டத்தில் சேர வாருங்கள். -விடுதலை 26-1-68.

ஏமாற்றுத் தனமான இந்திய ஒன்றியமும், மீமிசை மன்றமும், பார்ப்பனர்களும் தமிழன் முன்னேற்றத்துக்குத் தடையாக இருக்கின்றனர். பார்ப்பான் பண்ணையில் அஃதாவது -டி.டி. கிருட்டிணமாச்சாரி, ஆர். வெங்கட்ராமன் அமைச்சர்களாயிருந்ததில் பார்ப்பனத் தொழில் முதலாளிகள் கொழுத்தனர். தமிழ்நாடு தனிப் பண்ணையாவது மிக மிக இன்றியமையாதது. உரிமையின்பாற்பட்ட பிரிவினை, சட்டத்திற்கு மாறானது என்கிறார்கள். சட்டத்திற்கு மாறாக அழிவுவேலையில்லாமல் அமைதியாகத் தனிநாடு பெறுவோம். -விடுதலை 23-2-68,

...வகுப்பு நாயத்திற்காகவும் வகுப்புரிமைக்காகவும், தமிழர் தன்மதிப்புக்காகவும் தமிழ்நாடு இந்திய ஒன்றியத்திலிருந்து பிரிந்து, உரிமைத் தமிழ் நாடாக வேண்டியது தேவையாகும் என்று தீர்மானம் நிறைவேற்றுங்கள்.

...நாம் உயிர் ஈகத்துக்குத் துணிய வேண்டும். அப்போதுதான் பிரிவினை இயல்வதாகும், பேராயக் கட்சிக்காரர்களைப் போல் பதவிக்கு அலையக் கூடாது. - விடுதலை 13-4-68

பிரிவினை முயற்சியை நசுக்கி விடுவோம் என்று நம்மைப் பார்த்துச் சொல்கிறார்களே. கணவனிடம் வாழ விருப்பமில்லாமல் வெளியேறிய பெண்டாட்டியை, வழக்குமன்றக் கட்டளை ஏவலரை (அமீனவை) விட்டுப் படுக்கை அறையில் தள்ளச் சொல்வதுபோல் அல்லவா இருக்கிறது.

இப்பொழுதைய உரிமை கணவனுக்கு அடிமையாவதன் மூலம் மனைவி வைரக் கம்மல், வைர அட்டிகை, வியத்தகு விலையுயர்ந்த பொன்னிழை(சரிகை) உடைகள் அணிந்திருப்பதைப் போன்றதேயாகும்... மாநிலங்களுக்கு அதிக அதிகாரம் கேட்பது, வெறும் செருப்பால் அடிக்காதே, பட்டுக்குஞ்சம் கட்டி அதனால் அடி என்று சொல்வது போன்றதேயாகும்.

—விடுதலை, 13-7-68.

பிரிவினை கேட்டால் ஏழு ஆண்டுத் தண்டனை என்று தெரிந்தேதான் நாங்கள் கேட்டு வருகிறோம். தி. மு. கழகத்தை மிரட்டுவது போல எங்களை மிரட்ட முடியாது. நாங்கள் தேர்தலுக்கு நிற்கும் கட்சி(யைச் சேர்ந்தவர்கள்) இல்லை. —விடுதலை, 8 2-74.

நாட்டில் ஒன்று சேராதபடி 16 மாநிலங்களாகப் பிரித்துப், பல கட்டுப்பாடுகளைக் கட்டாயச் சட்டமாக ஆக்கிக்கொண்டான். இது உலகம் உள்ளவரை நிலையாக இருக்கவேண்டும் என்று வலுக்கட்டாயமும், பிரிந்துகொள்ள விரும்புகிறவனுக்குப் படிநிகராளி உரிமையில்லை, குற்றவியல் தண்டனை என்றும் ஆக்கிக்கொண்டு, மேல் சாதியினுடைய வல்லதிகார — அனைத்ததிகார — ஆட்சியை ஏற்படுத்திக் கொண்டு, **பரம்பரைச் சொத்துப்போல் இன்பம் துய்த்துக் கொண்டு** வரும் ஓர் ஆட்சியின் கீழ் நாமிருக்கிறோம். இதை **அடிமை ஆட்சி** என்று சொல்ல முடியாமலும், **மாற்றான் ஆட்சி** என்று சொல்ல முடியாமலும் தவிக்கின்ற நிலைமையில் நாம் இருக்கின்றோம்.

(தொடர்ச்சி 6 ஆம் பக்கம் பார்க்க)

இந்தியத் தேசியம் என்பது ஏமாற்றே!

இந்திய அமைதியின்மைக்கு இந்திய அரசே காரணம்!...

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டங்கள், வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள், அதிகார முற்றுகைகள், கட்டட உடைப்புகள், போக்குவரத்துச் சிதைவுகள், பொதுச் சொத்துச் சேதங்கள் முதலியவை அங்கிங்கெனாதபடி எங்கும் நடந்து வரும் அன்றாடக் காட்சிகளாகி விட்டன.

போதும் போதாமைக்குக் கொலைகள், கொள்ளையடிப்புகள், கற்பழிப்புகள், கயமைத்தனங்கள் போன்ற குமுகாயச் சீரழிவுகள் வேறு, ஆட்சியதிகாரத்தில் இருப்பவர்களுக்குச் சூளுரைகளாக வானோங்கி வளர்ந்து வருகின்றன.

இவ்வாரவார அழிவுக் கிளர்ச்சிகளுக்கிடையில் தாம் அரசு விழாக்கள், வேடிக்கைகள், விளையாட்டுகள் சமயச் சந்தடிகள், கலை, காமக் கூத்தடிப்புகள் முதலிய பணப் பாழடிப்பு முயற்சிகள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக அரசாலேயே வளர்க்கப் பெற்று வருகின்றன.

ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள், திரைப்பட நடிக நடிகையர்களை விடக் கவர்ச்சியாக நடிக்கவும் பேசவும் முற்பட்டு, வெட்கங்கெட்ட விளம்பரப் பாணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு நாடகமாடி வருகின்ற இழிவுகள் நாள்தோறும் மிகுந்து வருகின்றன.

அறிவாளிகளுக்கும், அறிவிலிகளுக்கும் வேறுபாடு தெரியவில்லை, படித்தவர்களுக்கும் படிக்காதவர்களுக்கும் அடையாளங்கள் விளங்குவதில்லை; நல்லவர்களுக்கும் கெட்டவர்களுக்கும் வேற்றுமைகள் புரிவதில்லை. அதிகாரிகளும் அரசியல்காரர்களும் ஒன்றாகவே காட்சியளிக்கின்றனர். இரு தரப்பினரின் சொற்களும் கூட ஒன்றுபோலவே தோற்றமளிக்கின்றன **பேசுவது காந்தியம்! நடப்பது பாசிசம்.!**

இந்நிலையில்தான் அரசு இந்தியத் தேசியம், நாட்டு ஒருமைப்பாடு, ஒற்றுமை என்று மாய்மாலக் கூத்துகளையும் வாய்நீள உரைகளையும் தொடர்ந்து நடத்தி வருகின்றன. இந்தியத் தேசியம் என்னும் செயற்கை உணர்வில் மக்களைச் சிக்க வைக்க அரும்பாடுபட்டு வருகிறது. இயற்கையான, உண்மையான மொழித் தேசியத்தையோ, இனத் தேசியத்தையோ, அரசு கண்களாலும் காண மறுக்கிறது; காதுகளாலும் கேட்க மறுக்கிறது. மனத்தாலும் மதிக்க மறுக்கிறது. இந்தியா, இந்தியா என்று பொய்த் தேசியம் பேசி, புளுகு ஆட்டம் ஆடி வருகிறது.

அரசு அனைத்து நிலைகளிலும் தனக்கு எதிராகக் கிளர்ந்தெழும்- செயல்படும்- மக்களின் உண்மையான எழுச்சிக் காரணத்தை அறிந்து கொள்ள விரும்பாமல், அறிந்து கொண்டாலும் செயல்பட முற்படாமல், மக்கள் உணர்வை அவமதிக்கிறது; அவர்களின் கோரிக்கைகளைப் புறக்கணிக்கிறது; அவர்களின் நாயமான போராட்டங்களை முறியடிக்கிறது; போராடுபவர்களையே அழிக்கப் பார்க்கிறது; அழிக்கிறது!

உண்மையான உணர்வாளர்களையும், சிந்தனையாளர்களையும், போராட்ட உணர்வுள்ளவர்களையும், கொள்கையாளர்களையும், தன்னை எதிர்க்கும் தலைவர்களையும் இல்லாமல் செய்துவிட்டு, அல்லது அடக்கி, ஒடுக்கி, அழித்துவிட்டு, யாரை மக்களென்று கூறி, இவர்கள் ஆட்சி நடத்தப் பார்க்க விரும்புகிறார்கள் என்று விளங்கவில்லை. ஊமை மக்களையும், கருத்துக் குருடர்களையும், மண்ணுளிப் பாம்புகளையும், வெறும் மூக்கு விழி வைத்த உடல்களையுமே ஒரு நாட்டுக்குத் தேவையான மக்கள் என்று இவர்கள் கருதுகிறார்களோ?

உள்நாட்டில் செழித்து வளர்ந்துள்ள உணர்வாளர்களையும், கருத்தாளர்களையும் போராட்ட வீரர்களையும் அடக்கி ஒடுக்கி அழித்துவிட்டால், வெளிநாட்டுப் போர் வருகிறபோது, இவர்களுக்குத் துணை நிற்க எஞ்சியவர்கள், வெறும் மாந்தப் பாவைகளாகவே இருக்க முடியும்? அக்கால், உண்மையான எழுச்சியுள்ள வீரர்களையும் உணர்வாளர்களையும் இவர்கள் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் போகிறார்களோ?

எனவே, நாட்டுணர்வுகளையும், போராட்ட எழுச்சிகளையும் வெறும் அழிவுக் கருவிகளைக் கொண்டே அடக்கிவிட நினைக்க வேண்டாம் ஆட்சியாளரிடம் உள்ள அக் கருவிகள் மக்கள் கைகளுக்கு வர நெடுநாள் ஆகாது! ஒரேயொரு கால எல்லைதான் தேவை! அஃது எந்தக் காலம் என்று யாராலும் வரையறுக்க முடியாது. ஊர் நலனுக்கென்று தேக்கி வைக்கப் பெறுகின்ற அணைநீர் அவ்வணையின் கரை உடைக்கப்படும்பொழுது, அஃது ஊரையே அழித்து விடும் என்பதை எப்பொழுதும் ஆளுமைக்காரர்கள் உணர்ந்து கொள்வதை விடப் போராட்டக் காரர்கள் உணர்ந்திருப்பார்கள் என்பதையேனும் ஆட்சியில் உள்ள இராசீவ்காந்திகளும், இராமச்சந்திரன்களும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்!

புரட்சி வாழ்க! புதுமை பொலிக!

வறட்சி நீங்குக! வல்லாண்மை ஒழிக!

பேரவலப் பெருந்துயரச் செய்திகள்

1. ஆட்சி மொழிக் காவலர் மறைவு!

தண்டமிழ்ப் பற்றாளரும், சிறந்த தமிழறிஞரும் ஆட்சி மொழிக் காவலரும் ஆகிய திரு. கி. இராமலிங்கனார் அவர்கள் தம் 87 ஆம் அகவையில், சென்னையில் கடந்த செப்டம்பர் 20 ஆம் நாள் மறைவுற்றார் என்னும் செய்தி கேட்டு ஆராத் துயர் கொண்டோம்.

தமிழ் ஆட்சிமொழியான பின்பு, அருந்தமிழ்க்கு ஆற்றிய தொண்டு மிகவும் நினைந்து போற்றுதற்குரியது. அரசு அதிகாரத்தில் இன்று நடைமுறைக்கு வந்துள்ள ஆட்சிமொழித் தமிழ் அவர் செய்த பெருந்தொண்டின் பயனே ஆகும். அவர் புகழ் தமிழ் உள்ளளவும் நிறைந்து விளங்கும்.

அவர் மறைவால் துயருற்றிருக்கும் அவர் குடும்பத்தினர் நண்பர்கள்; உறவினர்கள் அனைவர்க்கும் நம் ஆழ்ந்த இரங்கல்கள் உரித்தாகுக.

2. அருந்தமிழ்த் தொண்டர் மறைவு!

நெடுநாளைய உரத்த **தென்மொழி** அன்பரும், பல ஆண்டுகளாகத் **தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம்** இதழ்களை அன்பர்கள் பலருக்கு அறிமுகப்படுத்தியும், வரவழைத்துப் பெற்றும், படிக்குமாறு பரவலாக்கியும் வந்த தமிழ்த்திரு, **கு. தென்னவன்** என்னும் செயல் தொண்டர், கடந்த, 7—9—1986 ஆம் நாளன்று, புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் திடுமெனத் தம் இளம் அகவையில் காலமானார் என்னும் செய்தி கேட்டுப் பெருந்துயர் எய்தினோம்.

திரு. தென்னவன் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டம். கரம்பக்குடி அரசு மேனிலைப்பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியவர். அண்மைக்காலத்தில் அவர் குருதியழுத்த நோயால் துயருற்றார். அவருக்கு மனைவியும், மகனும் உள்ளனர்.

அவர்களுக்கும், அவர் உறவினர்களுக்கும், அன்பர்களுக்கும் 'தென்மொழி' தன் ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

தந்தை பெரியாரின்... தமிழ்நாட்டு விடுதலையே!

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டின் உரிமை இந்தத் தரத்தில் இருக்கிறது நமக்கு உண்மையான உரிமை வேண்டுமானால், தமிழ நாடு தனித்த ஒரே தன்னுரிமை ஆட்சியாய் இருக்க வேண்டும்.

— **பெரியார்,** (97 ஆவது பிறந்த நாள் மலர்)

இந்தியாவிலிருந்து தமிழ்நாடு தனியாகப்பிரிந்து விடவேண்டும் என்கிற பிரிவினை உணர்ச்சியை எவராலும் தடுத்து நிறுத்தமுடியாது. இந்தியா ஒரே நாடு என்று சொல்வதே பெரியதொரு புரட்டாகும்.

—கோபிசெட்டிபாளையம்—**பெரியார் பேச்சு,** 17-1-73

நாமிருக்கும் இந்தத் தேசம் இந்தியா என்பதை நாம் ஏற்றுக்கொண்டால், நாம் இந்து என்று ஏற்றுக் கொள்ளவேண்டும். நாம் இந்து என்பதை ஏற்றுக் கொண்டால் நாலாஞ் சாதியாகிய சூத்திரன் என்பதை ஏற்றுக் கொள்ளவேண்டும், நாம் சூத்திரன் என்பதை ஏற்றுக்கொண்டால், நாமெல்லாம் தாசி மக்கள் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த இழிவிலிருந்து விடுபடுவதற்கு ஒரே வழி தமிழ்நாடு தனி நாடாவதுதான்!

—சென்னை வண்ணையில், **பெரியார் பேச்சு,** 25-8-73.

நான் தன்னாட்சி (மாநில சுயாட்சி) கேட்டதாகவோ அல்லது தன்னுரிமைத் தமிழ்நாடு கோரிக்கையைக் கைவிட்டதாகவோ சொல்வது உண்மை இல்லை. — *'கரண்ட்'* இதழுக்கு நேருரை, 4-3-59.

நேருவின் உறுதிமொழி

பிரிந்து செல்ல விரும்பும் எந்தப் பகுதியையும், இந்தியஅரசில் இணைந்திருக்குமாறு கட்டாயப், படுத்தமாட்டோம்.

— Selected Works of J.Nehru. Vol: 5, Page 49

இந்திய அரசை நிறுவியபிறகு, பத்தாண்டுகள் கழித்துப் பிரிந்து செல்லும் உரிமையை மாநிலங்களுக்கு வழங்கலாம்.

—Discovery of India-By. Nehru. P. 452.

நன்கு அமைந்துள்ள எந்த ஒரு பகுதிக்கும் இந்தியக் கூட்டாட்சி அல்லது ஒன்றியத்திலிருந்து பிரிந்து செல்லும் உரிமை இருக்கும்.

—1945 ஆம் ஆண்டு பேராயக் கட்சி அறிக்கை.

உ. த. மு. க. அறிக்கை!

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிட்டு அனுப்பவும், அவற்றைக் கொண்டு தொகை தண்டிக்கொண்டிருக்கவும் நமக்கு நேரமில்லை, ஆனால், அனுப்பப்பெறும் ஒரு காசுக்கும் தமிழ் நிலத்தில் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பெறும்.

மொத்தமாகத் தண்ட விரும்புபவர்கள் இந்த அறிக்கையையே பொதுமக்களிடம் காட்டி, ஆங்காங்கே தண்டி அனுப்பலாம். ஆனால் தண்டுபவர்களைப் பற்றி அவர்கள் நன்கு தெரிந்திருப்பது நல்லது. ஏமாறிப் போகிறவர்களை நாம் தடுக்க முடியாதாகையால் இவ்வகையில் அவரவரும் விழிப்புடன் இருக்க வேண்டுவது அவர்கள் பொறுப்பாகும்.

கருத்தரங்கில் தம் முடிவான கருத்துகளை எடுத்துக் கூற விரும்புபவர்கள் அனைவர்க்கும் கூடிய மட்டில் வாய்ப்பளிக்கப்படும்.

அனைத்துக்கும் இன்றே தொடர்பு கொள்ளுங்கள். பிற விளக்கங்கள் பின்னர் வரும்!

10-10-86
சென்னை-5

அன்பன்
முதல்வர்,
உ. த. மு. க.

உ. த. மு. க.-வின் உயர்ந்த கொள்கைகள் :

- தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
- சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
- இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
- தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
- மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
- பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
- எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

கழக அருளாளர் : தென்மொழி நா. இளமாறன்.
கழக அருட்கொடையாளர்கள் :
தென்மொழி ந. முத்துக்குமரன். பல்லடம்-மா. ஆறுமுகம்.

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 75 TN. MS. (C) 657

அனுப்புதல் :
தமிழ்நிலம்
5, அருணாசலத் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

தொலைபேசி எண் : 847829.

உறுப்பினர் :
ஆண்டுக் கட்டணம் உரு. 36-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 18-00

பெறுநர் :
திரு. / திருவாட்டி
நூல் அஞ்சல்

ஆசிரியரும், வெளியிடுபவரும் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
அச்சிடுவோர் : தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.